**OS.No.300/2018** **P.W.1-வஜ்ரவேலு** **02.03.2026**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் கிரயம் பெற்ற மனை எண்கள்.100 மற்றும் 101 ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதை நான் கிரயம் பெற்ற 1ம் பிரதிவாதி தான் நிவர்த்தி செய்து தர வேண்டுமென்றால் சரிதான். கிரயம் பெற்றது தொடர்பாக எனக்கும், சொத்தை விற்ற 1ம் பிரதிவாதிக்கும் தான் சம்பந்தம் என்றும், 3, 4 பிரதிவாதிகளுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை செப்டம்பர் 2001ல் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். 2001க்கு பிறகு தாவா சொத்தின் பட்டாவை மாற்ற எந்த வருடம் விண்ணப்பித்தேன் என்றால் 2015க்கு பிறகு விண்ணப்பத்தேன். பொதுவாக ஒரு சொத்தை கிரயம் வாங்கும்போது அந்த இடத்தை நேரில் பார்த்து, 4 பக்க எல்லைகளை சரிபார்த்து கிரய முன்னோர்களின் ஆவணங்களை சரிபார்த்து கிரயம் வாங்குவார்கள் என்றால் சரிதான். கிரயம் பெற்ற பிறகு பொதுவாக உடனடியாக பட்டா மாறுதலுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் நான் முதல் முறையாக கிரயம் பெறுவதால் அந்த விவரம் எனக்கு தெரியாது. உண்மையில் நான் எனது சொந்த உபயோகத்திற்காக சொத்தை வாங்க முடிவு செய்திருந்தால் முன் கிரய ஆவணங்களை சரிபார்த்து கிரயம் பெற்றிருப்பேன் என்றும், கிரயம் பெற்ற 15 ஆண்டுகள் கழித்து பட்டா மாறுதலுக்கு நடவடிக்கை எடுத்திருக்க மாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் உரிமையில் பிரச்சனை இருப்பது குறித்து 1ம் பிரதிவாதியிடம் சொல்லி அவர் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் போய் பார்த்தபோது 1ம் பிரதிவாதி கூட்டுறவு சங்கம் கலைக்கப்பட்டிருந்தது. தாவா சொத்திற்கான பட்டா என் பெயரில் இதுநாள் வரை மாறவில்லை என்றால் சரிதான். மேல்முறையீடு நடவடிக்கை எடுத்தேன் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது இல்லை. 2001க்கு பிறகு எத்தனை ஆண்டுகள் கழித்து அதில் உள்ள குறைபாடுகளை கண்டுபிடித்தேன் என்றால் 15 ஆண்டுகள் கழித்து கண்டுபிடித்தேன். அதன் பிறகு குறைபாடுகளை சரிசெய்து கொடுக்குமாறு 1ம் பிரதிவாதியை அனுகினேனா என்றால் அனுகினேன். அதற்கு 1ம் பிரதிவாதி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1ம்

பிரதிவாதிக்கு நடவடிக்கை எடுக்க சொல்லி அனுப்பிய கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டபடி



உறுப்பினர் ஒருவருக்கு ஏதேனும் குறைபாடு இருந்தால் சங்கத்திடம் புகார் பதிவு செய்யலாம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கூட்டுறவு சங்கம் மீது வழக்கு தாக்கல் செய்வது குறித்து அவர்களிடம் முன்அனுமதியோ அல்லது அறிவிப்போ அனுப்பவில்லை என்றால் சரிதான். கூட்டுறவு சங்கத்திடம் நான் உரிய முறையில் அனுகாத நிலையில் அவர்களுக்கு எதிராக இந்த உரிமையியல் நீதிமன்றத்தை அனுகுவதற்கு சட்டப்படி உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் கூட்டுறவு சங்கத்திடம் கிரயம் பெற்ற யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. 3ம் பிரதிவாதி மட்டும் பெற்றுவிட்டார். 3ம் பிரதிவாதி பெயரில் 1995ம் ஆண்டு முதல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி சி.எம்.டி.ஏ-வில் அனுமதி பெற்று கட்டிடம் கட்ட துவங்கும்போது இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் அவர் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கும்போது வழக்கு தாக்கல் செய்தேன். 3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த இடத்தை எப்.எம்.பி வரைபடம் மூலம் காட்டமுடியுமா என்றால் காட்டமுடியும். அந்த எப்.எம்.பி வரைபடத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.38/5, 38/6-ல் 3ம் பிரதிவாதி 44 சென்ட் விற்றதை போக மீதியுள்ள 15 சென்ட் இடத்தை தன் கைவசம் வைத்துள்ளார் என்றால் அந்த நிலத்திற்குள் என் நிலமும் சேர்ந்துள்ளது. அரசால் பராமரிக்கப்பட்டு வரும் எப்.எம்.பி. வரைபடத்தில் 15 சென்ட் இடம் 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு 3ம் பிரதிவாதியின் கைவசம் உள்ள 15 சென்ட் நிலத்தில் 4 சென்டிற்கு ஒரு பட்டாவும், 11 சென்ட் நிலத்திற்கு ஒரு பட்டாவும் அவர் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த வருவாய் ஆவணத்தின் அடிப்படையில் 3ம் பிரதிவாதி எனது நிலத்தையும் சேர்த்து ஆக்கிரமித்துள்ளார் என்று குறிப்பிடுகிறேன் என்றால் கிரய ஆவணத்தில் உள்ள அளவுகளின்படி அவ்வாறு கூறுகிறேன். அவ்வாறு 3ம் பிரதிவாதியின் மீது நிலத்தை ஆக்கிரமித்துள்ளார் என்று கூறுவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் மறுக்கிறேன். சி அட்டவணை சொத்தில் 3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று எந்த ஆவணத்தின் படி கூறுகிறேன் என்றால் கிரய

ஆவணத்தின்படி அவ்வாறு கூறுகிறேன். சி அட்டவணை சொத்திற்கான சரியான 4 எல்லைகள் காட்டவில்லை என்றால் காட்டியுள்ளேன். எனது வழக்குரையில் காட்டியுள்ள சி அட்டவணை சொத்தில் எந்தகாலத்திலும் நான் அனுபவத்தில் இல்லை என்றால் மறுக்கிறேன்.



2001 முதல் சி அட்டவணை சொத்தில் 3ம் பிரதிவாதி தொடர்ச்சியான அனுபவத்தில் உள்ளார் என்றால் அதில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தும் உள்ளது. 3ம் பிரதிவாதியின் பெயரில் தான் சி அட்டவணை சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் உள்ளன என்றால் சரியல்ல. அவ்வாறு 15 சென்ட் இடத்தில் வீடு கட்ட 3ம் பிரதிவாதி முறையான அனுமதி பெற்று கட்டி வருகிறார் என்றால் சரியல்ல. அவ்வாறு 2001லேயே 3ம் பிரதிவாதி எனது நிலத்தை ஆக்கிரமித்திருந்தார் என்பது உண்மையானால் அப்போதே வழக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி எனது சொத்தை ஆக்கிரமிக்காததால் தான் போலீஸ் புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.415/2016 என்ற வழக்கை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆலந்தூரில் 6ம் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் உறுத்துகட்டளை பரிகாரம் எதுவும் பெறவில்லை. மேற்படி வழக்கில் ஆக்கிரமிப்பு குறித்து நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் உண்மையான சம்பவங்களை மறைத்து 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கட்டிடம் கட்டும்போது ஒரு விளம்பர பலகையை வைத்து அவர் கட்டிடம் கட்டுவதை தடுத்தேன் என்றால் விளம்பர பலகை வைத்தேன், ஆனால் கட்டிடம் கட்டுவதை தடுக்கவில்லை. அவ்வாறு ஒரு விளம்பர பலகையை 3ம் பிரதிவாதியின் சொத்தில் வில்லங்கம் இருப்பதை போல காட்டுவதற்கு முயற்சித்தேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)